# கலகலப்பு

நகைச் சுவை

மாத இதழ் ★

ஆசிரியர்

எஸ். கே. தீசன் ★

டிசம்பர் 1973

ஒரு கன்னி காதலனுக்கு எழுதிய............

நல்லதை + கெட்டதை —
அறிவைப் ×
ஆனால் அன்பை மட்டும்
÷ விடாதே

எஸ். கே.



தமிழ் வாழ தமிழன் வாழ வேண்டும்,
தமிழன் வாழ, தமிழ் உழவர் கூட்டம் பெருக வேண்டும்,
உழவர் வாழ பயிர் செழிக்கவேண்டும் பயிர் செழிக்க, பசளைகள், களை கொல்லிகள், கிருமி நாசினிகள், பங்கசு நாசினிகள், தெளி கருவிகள், நல்ல விதைகள் தேவை.

நாடுங்கள்

நாதன்ஸ்

உரிமையாளர்:
க. சுந்தரலிங்கம்,
இளைப்பாறிய விவசாய ஆசிரியர்.

பசார் வீதி,
வவுனியா.





பாண் "D" நாடு

விலை சதம் 50

வதந்தி பேதி துணுக்குகள் பக்கம் - 8

''ஆகாய பந்தலிலே பொன்னூஞ்சல் ஆடுதம்மா'' என்ற மெட்டு

பலகாரக் கடையினிலே பலகாரம் இல்லையம்மா
பாண் தன்னும் இருக்கோ என்றால் பதில் ஏதும் இல்லையம்மா
மாவில்லை அரைத்திட உழுந்தில்லை
தோசை தன்னும் சுடுவதற்கு
தேங்காயின் விலைகேட்டால் தேகமெல்லாம் நடுங்குதம்மா
உள்ளியின் விலைகேட்டு விட்டால் உயிர் இல்லாமல் போகுதம்மா
(பலகாரக் கடையினிலே)

பால் இல்லை புசித்திடப் பாண் இல்லை
பகல் பொழுதைப் போக்கிடவும்
சீனியின் விலைகேட்டால் சீற்றந்தான் வருகுதம்மா
தேநீரின் விலை கேட்டால் தேவையில்லை எங்குதம்மா.
(பலகாரக் கடையினிலே)

மல்லி இல்லை உள்ளி — மிளகுமில்லை
ரசம் வைத்துக் குடிப்பதற்கு
அரிசியின் ருசி கண்டு ஆறுவாரம் ஆச்சுதம்மா
கிழங்கு தன்னும் கிட்டாத பட்டினியாய்ப் போச்சுதம்மா.
இயற்றியவர் S. A. N. (பலகாரக் கடையினிலே)


பா ர்த்தவர்கள் பாராட்டுகிறார்கள்............
பா ராதவர்கள் விரைகிறார்கள்............

யாழ் ராணி சினிமாவில்

ஓடிக்கொண்டிருக்கிறது.

× மேஜர் சுந்தரராஜன் × நடிகையர் திலகம் சாவித்திரி
× முத்துராமன் × ஜெயா × சோ நடித்த

''குகநாதனின்''

பெத்த மனம் பித்து

இந்தியாவில் 100 நாட்களுக்கு மேல் ஓடிய
வெற்றிச் சித்திரம்



பொங்கல் தினத்தன்று
திருநெல்வேலி
சிவன் விளையாட்டு கழகத்தினர்
நடாத்தும்

மாபெரும் கலை விழா

திருநெல்வேலி சிவன் கோவில்
அருகாமையில்
காணத்தவறாதீர்கள்



சைக்கிள், மோட்டார் சைக்கிள்
பெற்றோமாக்ஸ், வாட்டப்பம்
உதிரிப்பாகங்கள்,
மற்றும், பற்றரி வகைகள்
பெற்றுக் கொள்ள சிறந்த இடம்

T. S. லிங்கம்ஸ் ஸ்ரோர்

மெயின்வீதி சுண்ணாகம்



ஆசிரியர் : பால் வெள்ளை நிறம்
ஒரு மாணவன் : வெள்ளை எப்படியிருக்கும் சார்?
இன்னொரு மாணவன் : 'சில்வர் வைற்' சோப்பால் சலவை செய்த உடை போன்றிருக்கும்.

சில்வர் வைற், நீல சோப், பார் சோப்

தயாரிப்பாளர்கள் :

கலா இண்டஸ்ரீஸ்

கோண்டாவில்



உள்நாட்டு உற்பத்திப் பொருட்களை
அதிகப்படுத்துங்கள்.
வாங்கவும் விற்கவும் நாங்கள்
உதவி செய்கிறோம்.

ஆரியாஸ் ஏஜென்சி

156, மலிபன் வீதி

கொழும்பு - 11

# G. C. E. பெயில் விட்டோர் சங்கம்

[சனீஸ்வரன்'S டியூடரி]

## புதிய அங்கத்தவர் சேர்தற்கான விண்ணப்ப படிவம்

1. பெயர் ..........................................................................................

2. தரம் (அதாவது G. C. E. எடுப்பது எத்தனையாவது தரம்)..............................

3. படித்த பாடசாலை..................................................

4. கடைசியாகப் படித்த டியூடரிகள் (1) (2)
 (3) (4)

5. பெயில் விட்ட பாடங்கள் (1) (2)
 (3) (4)

6. முழுப் பாடமும் பெயில் விட்டீரா ? ஆம்/இல்லை

7. பெயில் விட்ட பாடங்கள் போதித்த ஆசிரியர்கள் (1)
 (2) (3) (4)

8. ஒரு வருடத்தில் அந்த ஆசிரியர்
 (a) பாடசாலைக்கு வந்த தினங்கள்............
 (b) பாடங்கள் போதித்த தினங்கள்............

9. (a) நீர் பரீட்சை எடுக்கும்போது வயது ...........
 (b) தற்போது வயது ...........
 (மாணவியாக இருந்தால் வயதைக் குறைத்துப் போடலாம்)

10. பரீட்சை யெடுக்கும் போது
 (a) முன்னாலிருந்த மாணவனின்/மாணவியின் பெயர்.....................................
 (b) அவர் சித்தியடைந்துள்ளாரா? ஆம்/இல்லை

11. (a) தொடர்ந்து பரீட்சை எடுக்கும் நோக்கம் உண்டா ?
 (b) ஏன் ? .................................

12. (a) உங்கள் வீட்டில் G. C. E. எடுத்தோர் விபரம்
 (b) ,, ,, ,, பெயில் விட்டோர் விடரம்

சாட்சி

1.

2.

(சாட்சி G C E 7 முறை பெயில் விட்டவராக இருத்தல் வேண்டும்)

.............................................................

கையொப்பம்
அல்லது பெருவிரல் அடையாளம்

### முக்கிய குறிப்பு

G. C. E. பெயில் விடுவோர் தொகை அதிகமாவதால், G. C. E. பரீட்சைக்கு தோற்றும் போது கொம்பியூட்டாமூலம் நாம் சித்தியடைவோமா இல்லையா என்று சந்தேகம் கொள்வோர் உடனடியாக விண்ணப்பத்தையும் நிரப்பி அனுப்பி வைக்கலாம்.

### எச்சரிக்கை

பரீட்சைக்கு தோற்றுவோரை

அறிமுக அட்டை
பிரவேசப் பத்திரம்

கொலரா தடுப்பூசி
சான்றிதள் பத்திரம்

முதலியவற்றுடன் வரும்படி அழைக்கின்றோம்

அறிவழகன் (F.A.I.L.)
தலைவர் (G. C. E. பெ. ச.)


**SOON COMING !**

LOVERA LIKE CHOLERA

**Only for Two days**

CHOLERA IN KOKUVIL

# உள்ளிப் பூண்டு விவகாரம்

## கட்டபொம்மனை நினைவூட்டும் ஒரு சரித்திரக் கதை

எழுதியவர் : அநுராதா (லண்டன்)

நன்றி : லண்டன் முரசு (19-10-1973)

ஆளுங்கட்சி வேட்பாளர் உள்ளியைக் காட்டி வாக்காளர்களைக் கவர முயன்றதை, கேள்வியுற்ற திருகோணம் குறிச்சி உள்ளி மறுத்த வெள்ளை மருது சீற்றம் கொண்டெழுந்தார். நேரே ஆளுங்கட்சி வேட்பாளரை அவரது தென்திசைப் பாசறையினிலேயே போய்ச் சந்தித்த காட்சி.

ஓஹோ நீர்தான் உள்ளி மறுத்த வெள்ளை மருதுவோ ?

நீர்தான் உள்ளியை அள்ளி வீசிய கள்ள வேட்பாளரோ ?

ஆமாம் ...

இந்த உரையாடல் நடந்தபோது ஆளும் கட்சி வேட்பாளர் உள்ளி மறுத்த வெள்ளை மருது உட்கார ஆசனம் தராது மறுக்க, வெகுண்ட மருது அவ்வறையிலுள்ள ஒரேயொரு இருக்கையில் தானமாகிறார்.

ஏமாந்து நின்ற ஆ. க. வேட்பாளரைப் பார்த்து ; விளிக்காதீர்கள் ... உட்கார உமது உள்ளி மூட்டை இருக்குமே அதில் இரும்.

(உள்ளியைக் காட்டி எம்மை ஏமாற்றி வாக்குப் பெறநினைத்தீரோ ?) வானம் பொழிகிறது ... பூமி விளைகிறது ... நீரேன் தரவேண்டும் உள்ளி? ... கள்ளமில்லா பள்ளிச் சிறுவரும் உள்ளி பற்றி எள்ளி நகையாடுவர், உமது உள்ளி விவகாரம் கேட்டு உரிமையின்றி வாடும் எம்மினத்தவர் வயிறு எரிவதைத் தடுக்க உள்ளிரசம் செய்து தந்தீரா ? வெள்ளையுள்ளம் கொண்ட எம் மாதர் மகிழ நேற்றுவரை வெங்காயம் உரித்துக் கொடுத்தீரா ? வெள்ளைப் பூண்டை விழுதுபோல் அரைத்துக் கொடுத்தீரா ? பச்சை மிளகாயை நன்ருயரைத்துச் சம்பல் செய்தீரா ? புதிரை வாங்கி வந்து பொங்கினீரா ? ...... என்ன செய்தீர் இதுவரை ? உம்மையும் உமது கூட்டத்தையும் 'பூண்டோடு' அழிக்க நாம் உறுதி பூண்டிருக்கும் வேளையிலே உள்ளியைத் தீண்டாதீர் !! வெட்கமில்லை ! !!

[ஆ. க. வேட்பாளர் : உ. ம, மருதுவின் கர்ஜனை கேட்டு அலறி கண் விழித்துப் பார்த்துவிட்டு பிறகு தான் கண்டது கனவு என அறிந்து நிம்மதியாய் தூங்குகிருர்.]

# வராத படத்திற்கு வருமோ விமர்“சனம்”

## The Great Bread Robberies

“ப ஒ”

(கண்டிப்பாக பசியுள்ளவர்க்கு மட்டும்)

(நடிகர்கள் மன்னிப்பார்களாக)

பொதுசளம் பிக்சர்சாரின் ''த கிறேட் பிறட் றொபறீர்'' ஒரு மர்ம, பயங்கரப் படமாகும். பாணை ஏற்றிவரும் லொறி அதனைக் கைப்பற்ற ஆழ்ந்திருக்கும் கோஷ்டி குழந்தைகளைத் தூக்கி லொறியின் முன்னல் போட்டு, ஆட்களுக்கு சேதமுருத வகையில் பல ரூபா பெறுமதியான பாணைக் கடத்திச் செல்வதும், திருடிச் செல்வதும் பலரின் பாராட்டையும் பாணையே எதிர் பார்த்திருந்து ஏமாறும் மக்களின் ஏச்சையும் பேச்சையும் பெறுகிறது.

“பாண் பறித்தால் பல்லுடைப்பேன்
பஞ்சம் வந்தால் வெட்கமில்லை''     என்னும்

''இணுவையூர் வாலியின்'' சோகப் பாடல் பலரையும் கவர்ந்துள்ளது, ''பேக்கரிக்கு லாபம், கூட்டுறவுக்கு நட்டம்'' பைலாப் பாடல் இதில் தணிக்கை செய்யப்பட்டுள்ளது. இப்படத்தைப்போல் இப்பொழுது எங்கும் ஓடிக்கெண்டிருக்கிறது.

பாண் லொறி + பொதுசனம் = வெறும்லொறி + பொலீஸ் ஜீப்
(பசி வத்தால் பாணும் பறந்திடும்)

**அடுத்த இதழ் பொங்கல் சிறப்பிதழ்**

உங்கள் நகைச்சுவை கதை, கவிதை, கட்டுரை, துணுக்குகளை அனுப்புங்கள்.

| | |
|---|---|
| மாணவர்களின் | **கலகலப்பு** |
| ஆக்கங்களுக்கு | 68, சுந்தர பவனம், |
| பரிசில்கள் உண்டு | இணுவில். |

# சிந்திக்கச் செய்யும் சினிமாத் தலைப்புகள்

※ எஸ். ஜே. வி. யின் கடிதத்திற்கு பிரதமர் பதில் கடிதம்

★ நல்லநேரம் ★

※ வட பகுதியில் கொலரா யாழ் வருவோர் விஜயம் ரத்து

★ உயிர்மேல் ஆசை ★

※ அம்பாள் கிருபையால் நான் உயிர்பிழைத்தேன் வட்டு எம். பி.

★ தெய்வச்செயல் ★

※ நியமன எம். பி.யின் காருக்கு குண்டுவீச்சு சம்பவ சாட்சிகள் முரண்பாடு

★ பித்தலாட்டம் ★

※ சந்திரனுக்கு சென்றுவது அரிசி கொண்டுவந்து தருவோம்

★ பொய் பேசாதே ★

※ ஒரே சூலில் 5 குழந்தைகள்

★ தெய்வத்தாய் & பெண் என்றல் பெண் ★

※ ஐந்து பிள்ளைகளின் தாய் இளைஞனுடன் ஓட்டம்

நான் எப்படி என் பிள்ளைகளுக்கு சொல்லுவேன்

★ HOW DO I TELL TO MY CHILD ★

※ இணுவிலில் 4 மாடுகள் திருடிய இளைஞன் பிடிபட்டான்

★ கவ்போய் கணபதிப்பிள்ளை ★

※ ஜவுளிவிலைகள் பெருமளவு குறைந்தன

★ புதிய வாழ்க்கை ★

※ நாம் இருவரும் அமைத்ததே உன்மையான காங்கிரஸ்

★ இருவல்லவர்கள் ★

※ ஓடு பிரித்த நிலையில் சிலந்தி வலை சிதைக்கப்படாமல் 17000 திருட்டு

★ நீலமலைத் திருடன் ★ திருடன் ★

★ வல்லவன் ஒருவன் ★

※ வேண்டாம் கறுப்புக்கொடி, ஏந்துவோம் மண்வெட்டி நல்லூர் எம். பி.

★ நாட்டுக்கொரு நல்லவன் ★


நம்நாடு முன்னேற ஏனில்லை வழிகள்
ஊக்கிடுவீர் உயர்த்திடுவீர் உள்நாட்டு பொருளை

★

**கனகலிங்கம்பிள்ளை & சன்ஸ்**
**17, சென் ஜோன்ஸ் ரேட்,**
**கொழும்பு - 11**


வட பகுதி எம். பி. லஞ்சம் வாங்கிஞராம்

★ ஹலோ பாட்ணர் ★

※ தியாகராஜா எம். பி. துப்பாக்கி சூட்டு சம்பவத்தையடுத்து அருளம்பலம் எம். பி. க்கு பலத்த காவல்

★ ஏன் ★

※ கலகலப்பு பத்திரிகைக்கு பேட்டி யெடுப்பதற்கு வந்ததாக கூறி என்னைச் சுட்டனர்.

★ சத்தியம் தவறுதே ★

※ பண்டாரநாயக்கா மண்டபம் திறப்புவிழாவிற்கு பலருக்ந அழைப்பிதழ்

★ வரவேற்பு ★

※ உணவின்றி பட்டினியால் வயோதிப மாது சாவு

★ நம்நாடு — அப்னுதேஷ் ★

※ உடுவில் எம். பி. தர்மலிங்கத்தின் காரில் தமிழ் 'ஸ்ரீ' (ஸ்ரீ)

★ உத்தம புத்திரன் ★

※ மக்கள் யார் பக்கம் என்பதை காலம்தான் உங்களுக்கு பதில் சொல்லும் ஜே. ஆர்.

★ எதிர் காலம் ★

※ பஸ்ஸில் இடமிருந்தும் பிரயாணிகளுடன் சர்சை செய்தார் கொண்டக்டர்

★ சர்வாதிகாரி ★

கலகலப்பான வாசகர்களே, 7-6-1972ல் பம்பலப்பிட்டியில் வட்டுக்கோட்டை எம். பி. திரு. S. தியாகராஜா அவர்களை ''**கலகலப்பு**'' பத்திரிகைக்கு பேட்டி எடுக்க வந்ததாக **கூறி** இரு இளைஞர் (கட்டையனும் நெட்டையனும்) சுட்டனராம். அதைத் தொடர்ந்து என்னை பம்பலப்பிட்டியிலிருந்து பம்பலப்பிட்டிப் பொலிஸ் நிலைய அதிபர் திரு. S. கனகசிங்கம் (I. P.) தலைமையில் பொலிஸ் கோஸ்டி சுன்னாகத்தில் வைத்து விசாரணை செய்ததும் அதனைத் தொடர்ந்து இரகசியப் பொலிசாரும் விசாரணை செய்தார்கள்.

இவர் தான் தியாகராசா எம். பி.

இவர் தான் கலகலப்பு தீசன்

# வட்டு எம்பியும் சுட்ட தீசனும்

புளொக் (BLOCK) செய்யும் செலவுகள் அதிகரித்துள்ளதால் குறிப்பிட்ட இடங்களில் படம் அச்சிட முடியவில்லை. (ஆர்)

**(ஆனால், என்னை ரிமாண்டில் வைக்கவில்லை** யென்றும் நான் ஜெயிலில் இருக்கவில்லை யென்றும் வாசகர்களுக்கு அறியத் தருகிறேன். சிலர் வீண் வதந்திகளும் இதை யொட்டிப் பரப்பினர். **அவையெல்லாம்** பொய் வதந்திகளே.)

**அதைத்** தொடர்ந்து வரதரின் மாத சஞ்சிகை 'வெள்ளியில்' வெளிவந்த எனது பேட்டியையும் கட்டுரையையும் இம்முறை வாசகர்களுக்கு அளிக்கிறேன். **— தீசன்**

**(வெள்ளியில் வெளிவந்த கட்டுரையுடனும் பேட்டியுடனும் தொடர்கட்டுரை ஆரம்பமாகிறது)**

---

(வட்டுக்கோட்டை எம். பி. தியாகராசாவை ஒரு இளைஞன்சுட்டான்! 'கலகலப்பு' சஞ்சிகைக்காகப் பேட்டிகாண வந்ததாக சொன்னான் அவன்...)

## 'கலகலப்பு' ஆசிரியர் இவர்!

''இவர்தான் 'கலகலப்பு' ஆசிரியர் தீசன்!'' — ஒரு நண்பர் அறிமுகப்படுத்துகிறார்.

ஆச்சரியப்படுகிறேன். ''இவரா! இவரைத்தானா சொன்னார்கள், எம். பி. தியாகராசாவைக் சுட்டவரென்று!''

'அடோல்ஸ் ஒன்லி' படம் பார்ப்பதற்கு இவர் சமீபத்தில் தான் தகுதி பெற்றிருப்பார்.

''மிஸ்டர் தீசன், உங்களுக்கு எம். பி. தியாகராசாவுடன் பழக்கமுண்டா?''

''இல்லை!''

''அவரைப் பார்த்திருக்கிறீர்களா?''

''ஓ!''

''எங்கே?''

''பட...ங்களில் — பத்திரிகைகளில் வந்த படங்களில்!''

ஏமாற்றம்; — எனக்கு.

''நீங்கள் எங்கே படிக்கிறீர்கள்?''

'''படித்தீர்கள்' என்று கேளுங்கள், — யாழ்ப்பாணம் ஸ்டான்லியில்.'' (விடுதியில்)

''அங்கே மாணவர் இயக்கங்களில் பங்கு பற்றியிருக்கிறீகளா?''

''இல்லை'' – (போச்சு!)

''நான் சி. ஐ. டி. காரனில்லை. பயப்படாமல் சொல்லுங்கள்!''

''சி. ஐ. டி. பயமெல்லாம் இப்போது எனக்குத் தெளிந்து விட்டது. —நீங்கள் நினைக்கிற மாதிரி நான் ஒரு தீவிரவாதியல்ல.—ஒரு நகைச்சுவை எழுத்தாளன் மட்டுமே!''
(ப்பூ, இவ்வளவு தானா)

''மாணவர்களிடையே உங்களுக்கு மிகுந்த செல்வாக்கு இருக்கிறதாமே?''

''இருக்கலாம்!'' (— அப்படி வாரும் வழிக்கு'')

''அது எப்படி வந்தது... மாணவர் இயக்கங்களில் ஏதோ ஒரு வகையில் உங்களுக்குத் தொடர்பு இருப்பதால்தானே அவர்களிடையே செல்வாக்கு ஏற்பட்டிருக்கிறது?''

''உங்களுக்குச் சந்தேகம் போகவில்லை. மாணவர்களிடையே 'கலகலப்பு' சஞ்சிகையில் நான் எழுதும் நகைச்சுவைக் கட்டுரைகளுக்கு நல்ல வரவேற்பு உண்டு. அதனால்......'

'ஓ... அதுதானா? 'கலகலப்பு' சஞ்சிகையில் இதற்குமுன் யாரையாவது பேட்டிகண்டு எழுதியிருக்கிறீர்களா?'

'பேட்டிக் கட்டுரைகளுக்கு 'கலகலப்பில்' இடமில்லை. அதில் நகைச்

### வட்டு எம் பியும் சுட்ட....

சுவை விஷயங்கள் மட்டுமே வெளிவரும்.'

'ஏன் சில அரசியல் கோமாளிகளின் பேட்டிகளும் நகைச்சுவையாக இருக்குந்தானே?... அதிருக்கட்டும். உங்களுக்குத் துப்பாக்கியால் குறி பார்த்துச் சுடத் தெரியுமா?'

'எனக்குத் தெரியாது. எம். பி. யைச் சுட்டவனுக்கும்கூட அது சரியாகத்தெரியாதென்பதைப் பத்திரிகைச் செய்தி மூலம் அறிந்திருப்பீர்களே?'

'ஓ, அந்த விஷயத்தில் உங்கள் இரண்டு பேருக்கும் ஒற்றுமை இருக்கிறதே!'

'ஐயையோ!...'

'இன்னுமொன்று. உங்களுடைய வளர்த்தி என்ன?'

'எழுத்துலகிலா?'

'இல்லை, உங்கள் பாதத்திலிருந்து தலை வரைக்கும்,'

'4 அடி 91/4 அங்குலம்.'

'எம். பி.யைச் சுட்டவனும் ஒரு கட்டையன் என்று பத்திரிகையில் செய்தி வந்ததே!... இது இரண்டாவது ஒற்றுமை!'

தீசன் சற்றுப் பயந்தவர் மாதிரிக் காணப்படுகிறார். பிறகு மெதுவாக, 'என்னைப்பற்றி பொலிசுக்கு 'றிப்போட்' செய்வீர்களா?' என்று கேட்கிறார்.

'...ஒரு குற்றவாளியைப் பற்றி பொலிசாருக்கு அறிவிக்கவேண்டியது ஒரு பிரஜையின் கடமை......'

'உங்களைப் பார்த்தால் நல்லவர் மாதிரி இருக்கிறது. நீங்கள் அந்த வேலையைச் செய்ய வேண்டாம்!'

'ஏன்'?

'அப்படிச் செய்தால், உங்களை அங்கொடைக்கு அனுப்புவது பற்றித் தான் யோசிப்பார்கள்... என்னைப் போலவும், எம். பி.யைச் சுட்டவன் போலவும் துப்பாக்கி சுடத்தெரியாத கட்டையர்கள் இந் நாட்டில் ஆயிரக் கணக்கானபேர் இருக்கிறார்கள்!'

(அடடா, என்னுடைய அருமையான இரண்டு 'பொயின்ற்'றுகள் போச்சே!...)

'சரி, சரி. எம். பி.யைச் சுட்டதற்கும் உங்களுக்கும் என்னதான் தொடர்பு இருக்கிறது.?'

'அவரைச் சுட்டவன், தான் 'கலகலப்பு' சஞ்சிகையின் சார்பில் பேட்டி காண லந்ததாகச் சொன்னான்—என்பது எம். பி.யின் வாக்கு மூலம். 'கலகல'ப்பு என்ற சஞ்சிகையின் ஆசிரியர் நான். இதை வைத்துக்கொண்டு தான்...'

'அவ்வளவுதானா?'

'அவ்வளவுதான்'

'நல்லது நீங்கள் ஒரு எழுத்தாளர். நடந்த விஷய்த்தை - உங்கள் நகைச்சுவை நடையிலேயே வெள்ளி வாசகர்களுக்கு எழுதித் தருவீர்களா?'

'ஆஹா. நன்றியுடன்!'

---

('கலகலப்பு' ஆசிரியர் எழுதிய கட்டுரை அடுத்த கலத்தில்)

—ஆசிரியர்.

---

வட்டு எம் பியும் சுட்ட தீசனும்
தொடர் கட்டுரையில்
அடுத்த இதழ் தொடர்----

**பொலீஸ்**
**எனைத் தொடர்ந்தபோது**

## 'கலகலப்பு' ஆசிரியர் எழுதுகிறார்!

அன்று வெள்ளிக்கிழமை (9-6-72) மூட்டைக்கடியும் பொருட்படுத்தாது மூன்றாவது முறை உருண்டு படுத்தேன். காய்ச்சல் 1·08-க்குமேல். தலையிடியும் குறையவில்லை. நேரம் சரியாக 7-30. வானொலியில், பிறந்த நாள் வாழ்த்து முடிவடைந்தது. 'தீசன், தீசன், தீசன்!' - வானொலியிலிருந்து குரல் வரவில்லை. வீட்டு வாசலிலிருந்து வருகிறது. காலை நேரமாதலால் அது பேயாக இருக்காது என்ற துணிவுடன் வாசலுக்கு வருகிறேன். ஒரு டசின் நண்பர்களுக்குமேல் ஒவ்வொருவர் கையிலும் ஒவ்வொரு பத்திரிகை.

'தீசன் இன்று பேப்பர் பார்த்தீரா?' என்று வினவினார் ஒரு நண்பர்.

'உன்னை இன்னும் பொலீஸ் பிடிக்கவில்லையா?' —

இது இன்னொரு நண்பன்.

எனக்கு ஒன்றும் விளங்கவில்லை,

'இந்தா, பத்திரிகையைப் பார்!' என்றார் இன்னொருவர்.

எனக்கு சுவீப் ஏதாவது விழுந்திருக்கிறதா,!

அல்லது

என் கதை ஏதாவது பிரசுரமாயிருக்கிறதா?

'தியாகராஜா எம்.பிக்கு துப்பாக்கிச் சூடு!'

'சுட வந்தவர்கள் 'கலகலப்'பின் பிரதிநிதிகள் எனக் கூறினர்'

செய்தியை வாசித்து முடிந்ததும், எனது காய்ச்சலும் தலையிடியும் இரட்டிப்பாயின.

எனக்குக் காலும் ஓடவில்லை கையும் ஓடவில்லை; கையிலுள்ள மணிக்கூடுதான் ஓடிக்கொண்டிருந்தது. நேரம் 8 மணி.

என்ன செய்வதென்றே புரியவில்லை. உடனடியாக பொலீஸ் அதிபரைச் சந்திக்கப் புறப்பட்டேன். அந்நேரம்பார்த்து வானொலியில் எம்.பி.யைச் சுட்ட செய்திகள் வந்திருந்தன, காய்ச்சலால் மேல் சுடச்சுடச், காலில் வெய்யில் சுடச் சுட பொலிஸ் அதிபரின் காரியாலயத்திற்குச் சென்றேன். அங்கு அவர் இல்லை.

உதவி பொலிஸ் அதிபரிடம் சென்று விடயத்தைக் கூறி, எமது பத்திரிகைக்குப் பிரதிநிதிகளோ நிருபர்களோ இல்லையென்ற விபரம் கூறினேன். சி. ஐ. டி. வீட்டிற்கு வருவார்கள் எனக் கூறினார் அவர்.

### பொலிசும் ஜீப்பும்

அன்று இரவு முழுக்க எனது கனவில், பொலிசும், ஜீப்புமே காட்சியளித்தன. அடுத்தநாள் வீட்டிலேயே நின்றேன். ஒருவரும் வரவில்லை; அதற்கடுத்தநாள் யாழ்ப்பாணம் வந்து 'எங்கமாமா' படம் பார்த்துவிட்டு பஸ்ஸில் இணுவிலை அடைந்தபோது, பஸ்நிலையத்தடியில் எங்கமாமா (எனது மாமா) நின்றுகொண்டிருந்தார். பொலிசார் வீட்டிற்கு வந்து எனது புகைப்படத்தை எடுத்துச் சென்றுவிட்டதாகவும் என்னை உடனடியாக சுன்னாகம் பொலிஸ் நிலையத்திற்கு வரும்படி அவர்கள் கூறியதாகவும் சொன்னார். உடனே சுன்னாகம் பொலிஸ் நிலையத்திற்குச் சென்றேன், அங்கே உதவியாசிரியர் பாஸ்கர் சிந்தித்த வண்ணம்

12-ம் பக்கம் பார்க்க

# படம் பார்த்த பாவையோன்றின் பரிசளிப்பு மடல் பாரீர்!

— டோ —

எங்கிருந்தோ வந்தாள் என நான் எண்ணிக் கொண்டிருந்த பொழுது அன்பு எங்கே என எனை நாடி வந்தாய், இருவரது அன்பும் துலாபாரத்தை ஒத்திருந்தன. நாம் விளையாட்டுப் பிள்ளையாக திரிந்தோம். எமது சந்திப்பு புன்னகையை அளித்தது. உன்னை நண்பர்க விளிக்கும்போது ஆயிரத்தில் ஒருத்தியம்மா என்னுமளவுக்கு நீ ஒரு வெகுளிப் பெண்ணாக இருந்தாய். உனது முகராசி என்னை மிகவும் கவர்ந்து விட்டது. வகுப்பில் நீ ஒளிவிளக்காகவும், மற்றையோரைக் கொப்பியடித்து நூற்றுக்கு நூறு எடுக்காமல் பத்தாம் பசலியாகவும் இருக்காமல், பெண்ணுக்கு தங்கமனது என மற்றையோர் நினைக்குமளவுக்கு வீட்டிலும் சிறந்த குலவிளக்காகவும் எதிலும் நாணல் போலவும், வாயாடி என்ற பெயரை எடுக்காமல் பெண் என்றால் பெண் என நினைக்கும்படி புகுந்த வீட்டில் குத்துவிளக்கு ஏற்றி நெஞ்சிருக்கும்வரை நான் நினைக்கத் தக்கதாக எனை மறக்காமல் குழந்தை உள்ளம் கொண்ட நீ நினைத்ததை முடிப்பவன் என்ற திறமை உள்ளவனை, அதாவது உனது கணவன் என்ற ஸ்தானத்தில் உள்ளவனை, அவனா இவன் என அங்கலாய்க்காமல், மஞ்சள் குங்குமம் பூண்டு, பூவும் பொட்டும் திகழ மாமன் மகளா என வியந்து உன் ஆசை முகம் நோக்க, உன் கல்யாண ஊர்வலம் கண்டோர் மகராசியாக வாழ்க என வாழ்த்த, சபாஷ் மாப்பிளை என வீட்டுக்காரர் அழைக்க, கலாட்டா கல்யாணமாக இல்லாமல் லஷ்மி கல்யாணமாய் நடைபெற, விவசாயியின் பெருமை துலங்க சிவந்த மண்ணில் பொன்னுவிளையும் பூமியில் நாலுவேலி நிலமேனும் பயிர் விளைந்து நாட்டுக்கொரு நல்லவனாக உன் துணைவனுடன் வாழ வாழ்த்தி கல்யாணப் பரிசை அன்பளிப்பு செய்கிறேன்.

— சினேகிதி

**3-வது மாதம்? !**

எத்தனையோ இடங்களை தாண்டி (மீறி) ஓடிக்கொண்டிருக்கிறது

A. சர்டிபிக்கேற் பெற்ற அடங்கா மூவீசாரின்

அஞ்சுகம் பிக்சஸ்

(5, Come) அளிக்கும்

★ **கண்டிக்கு வா காதலிப்போம்** ★

கதை வசனம் : டைரக்சன் : ?

★ **கடைசி 3 தினங்கள் மட்டும் "வெருளிப் பெண்"** ★

## கவலைப்படாதே!

**வள்ளி:**

இஞ்சருங்கோ! கேட்டியளி, பவளத்தின்ரை வயல்லை விளைச்சலைப் பாத்தியளி, கடவுளே இனி அவளைக் கையிலும் பிடிக்கேலாது.

**கணவதி:**

சும்மா ஆத்திரப்படாதெ, அவள் நல்ல பசளைகளைப் போட்டாள் அதனால்தான் நல்ல விளைச்சல்,

பவளத்தின் வயலைப்போல் நீங்களும் விளைச்சல்பெற சிறந்த உரப் பசளையிடுங்கள்.

விற்பனையாளர் :

**மலர்மதி விநியோகஸ்தர்**

உரிமையாளர் :

**இ. தெய்வேந்திரம்**

முத்தையன்கட்டு, ஒட்டிசுட்டான்.

## புதுமொழி

— டோ —

மாலை போட்டதும் சிலர் பேசுவார்கள்;
மாலையில் போட்டதும் சிலர் பேசுவார்கள்.

## இந்த நேரங்களில் இப்படிப் பாடல்கள் ஒலித்தால்

-டேர-

கொலரா பரவி வருகையில் யாழ்ப்பாணம் செல்லும் கணவனைப் பார்த்து மனைவி

போகாதே, போகாதே,
என் கணவா...

குழந்தைக்காக லக்ஸ்பிறே தேடி அலைபவர்

நானுன்னைத் தேடுகிறேன்...

யாழ் மத்தியில் (ஓடாமலிருக்கும்) மணிக்கூட்டில் நேரம் பார்ப்பவரை பார்த்து

பட்டிக்காடா பட்டணமா....

லெச்சனில் வெல்வதற்காக பணத்தை யெல்லாம் அள்ளிக் கொடுத்த எம். பி. யைப் பார்த்து

கொடுத்த தெல்லாம் கொடுத்தான்
அவன் யாருக்காகக் கொடுத்தான்....

பிக்பொக்கட் காரனைத் தொடரும் பொலீசார்

எங்கே நீயோ நானுமங்கே
உன்னோடு....

பரீட்சைக்குப் போகும் மாணவனைப் பார்த்து

அக்கம்பக்கம் பார்க்காதே
ஆளைக்கண்டு மிரளாதே....

காதல் கடிதம் தந்த பெண் வேறொருவரை மண முடிக்கும் போது

எங்கிருந்தாலும் வாழ்க...

பரீட்சை மண்டபத்தில் ரகசியமாக பின்னாலே திரியும் அதிகாரியைப் பார்த்து

மறைந் திருந்தே பார்க்கும்
மர்மமென்ன...

தடுப்பூசி போடாது டிமிக்கி கொடுத்து கொழும்புக்கு செல்பவன் பொலீசைப் பார்த்து

தடுக்காதே, என்னைத்
தடுக்காதே....

## கலரசம் வாசகர்கள் வாயிலிருந்து

வட்டு எம்.பி.யும் சுட்ட தீசனும் கட்டுரை எழுதி மாட்டுப்படப் போகிறீர் கவனம். M. ராஜ்குமார், நெல்லியடி

பரீட்சை களுக்காண்டம் வகுப்பில் ஆசிரியரும் நாங்களும் வாசித்து சுவைத்தோம், ரசித்தோம்.
K. சசிகுமார், மாங்குளம்

சினிமாத் தலைப்பும் செய்தியில் மலைப்பும் ருசிப்பும் ரசிப்பும் உள்ளது. அதிலும் அரங்கேற்றம் or ஐடியல்மறேஜ் சுவையூட்டுகிறது.

கீழ்கரவை பொன்னையன் எழுதிய அதுபோதும் என்ற கதைக்கு "அடி போதும்" என்று மாத்தியிருக்கலாம்.
V. முரளிராஜ், கோப்பாய்

விலைவாசி காலத்தில் சம்பல் அரைக்கும்முறைசொந்த அனுபவம் போலும்
S. ஸ்ரீபவன், நீராவியடி

முறையாக ஒருமுறை பொலீசில் அகப்பட்டால்தான் திருந்துவீர் போலிருக்கிறது. C. சந்திரலேகா, சுன்னாகம்


கலகலப்பு விளம்பர இதழா? நகைச் சுவை இதழா? தீபாவளி இதழ் விழம்பரங்கள் அதிகம் S. R. B. அவிசாவலை

அட்டைப்படம் மூவர்ணக் கலர் கவர்ச்சியாகவும் இருக்கிறது. அத்துடன் எழுச்சியாகவும் இருக்கிறது.
R. சிவானந்தன், வல்வெட்டித்துறை

இடையில் ஒரு சில பாதம் தடைப்பட்டு வெளிவந்தது வெளிவந்தவுடன் பெரும் பரபரப்பை ஏற்படுத்திவிட்டதே. S. A. பிரகாஷ், கொழும்பு-11

யாழ் மணிக்கூட்டுக் கோபுரம் மாதிரி உமது பத்திரிகையும் ஒழுங்கில்லையே.
S. ரஞ்சிதமலர், குருநகர்

---

வந்த இடம்

நல்ல இடம்

பகதன் : இறைவா திடீரென்று அடியேன் வீட்டுக்கு வந்ததன் மர்மம் என்னவோ?

இறைவன்: சற்று அசதியாக இருக்கிறது உன் வீட்டில் மற்ரு பேணிச்சரில் வாங்கிய ஸ்பிறிங் மெத்தைக் கட்டிலில் சிறிது நேரம் தூங்கிவிட்டுப் போகலாமென வந்தேன். அதுதான்

சிறந்த மெத்தைக் கட்டில்கள்
மற்றும் வீட்டுத் தளபாடங்களுக்கு

**மற்ரு பேணிச்சர்**

**87, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

## அன்புள்ள மன்னவனே ஆசையில் ஓர் கடிதம்

கமலா : ஏண்டி கமலா, அறையெல்லாவற்றையும் பூட்டிவிட்டு பியூட்டி பாமா என்னடி எழுதுகிருள்

விமலா : கொழும்பிலிள்ள காதலுனுக்கு கடிதமெழுதுகிருள் கொலரா கிருமிகள்போகாமலிருக்க வேணுமென்பதற்காகத்தான் உந்த ஏற்பாடு.

* * *

## உன்னையொன்று கேட்பேன் உண்மை சொல்ல வேண்டும்.

கந்தையர் : என்னட்பா சண்முகம், றேடியோ ஒன்று வாங்கியிருக்கிறீரே. எல்லா ஸ்ரேசனும் இழுக்குதோ ?

சண்முகத்தார் : அதென்னப்பா அப்படிக் கேக்கிரு ஒருக்கா லைசென்ஸ் இல்லையெண்டு பொலிஸ் ஸ்ரேசன் வரையும் என்னை இழுத்திருக்கு.

கந்தையர் : ?.. ......... !

* * *

—"டோ"—

## ஒரு பேச்சுச் சொன்னேன் அது பெண்புத்திதானே

மனைவி : இஞ்சருங்கோ வரவர எனக்கும் கண் சாதுவா தெரியிதில்லை வாருங்கோ போய் ரவுணில் ஆருக்கன் கண்ணைக்காட்டிப் போட்டு வருவம்.

கணவன் : ரவுணிலைபோய் ஆரிட்டையன் கண்ணைக் காட்டாதே, நல்ல டொக்டர் மாரிட்டை காட்டு.

* * *

## ஏன் பிறந்தாய் மகனே! ஏன் பிறந்தாயோ?

மகன் : அப்பா நான் சைக்கிளில் போகும்போது என்ன சொன்னீர்கள்?

தந்தை : சைக்கிளைப் பூட்டி திறப்பை கவனமாக வைத்திருக்கும்படி கூறினேன்.

மகன் : நீங்கள் சொன்னபடி திறப்பை கவனமாக கொண்டு வந்திருக்கிறேன்.

தந்தை : அப்போ! சைக்கிள்

மகன் : அதைத்தான் காணவில்லை.

தந்தை : ? ............... ! ......

* * *

## என் கேள்விக் கென்ன பதில்?

உயிரியல் பாடத்தில் ஆசிரியர் இனப்பெருக்கம் பகுதி விளக்கிக் கொண்டிருக்கிருர் அப்போது )

மாணவன் : ஏன் சார், குந்திதேவி கன்னியாக இருக்கும்போது கர்ணன் எப்படி சார் பிறந்தான் ?

ஆசிரியர் ; ? .................. ? !

* * *

## கேளுபாப்பா கேளுபாப்பா கேள்விகள் ஆயிரம் கேளுபாப்பா

( இலக்கிய ஆசிரியையிடம் மாணவன் )

ஏன் டீச்சர் தமயந்தி அன்னத்திடம் மடலை (அதாவது லவ் லெட்டர்) நளனுக்கு கொடுத்தனுப்பினுள் அந்தக்காலத்தில் போஸ்ற் பியூன் இல்லையா ?

ஆசிரியர் : ?.................. ? !

* * *

## யாரைத்தான் நம்புவதோ பேதை நெஞ்சம்....

ஒருவர் : ஏன் சார் தொலைந்த பொருட்களையும் தொலைந்த ஆட்களையும் கண்டுபிடிக்கும் கம்பனி ஒன்றை உருவாக்கினீர்களே அது இப்போ என்னவாயிற்று.

மற்றவர் : அங்கு வேலை செய்தவர்களெல்லாம் இருந்த பொருட்களையும் கொண்டு தலைமறைவாகி விட்டனர் அவர்களையும் பொருட்களையும் தான் தேடுகிறேன்,

## ஆணையிட்டேன் நெருங்காதே

**காதலன்:** அன்பே நீ தான் என்னுயிர் என்னிடம் நீ எதை வேண்டு மானாலும் கேள்.

**காதலி:** நீங்கள் யாழ்ப்பாணத்திலிருந்து வந்திருக்கிறீர்கள் கொலரா தடுப்பூசி சர்டிபிக்கேற்றை காட்டினால் போதும்.

★ ★ ★

## ஏன்! ஏன்!! ஏன்!!!

**யமன்:** சித்திர புத்திரா, பூலோகத்திலே (இலங்கையிலிருந்து) வரவேண் டிய சில உயிர்களை இன்னும் கொண்டுவரவில்லையே ஏன்?

சி. புத். பிரபு, அங்கே கொலரா கடுமையாகப் பரவி வருகிறது அதனால் சென்ற தூதுவர்கள் இடையிலேயே திரும்பிவிட்டார்கள்.

**யமன்:** ? ! !

★ ★ ★

## நிலவைப் பார்த்து வானம் சொன்னது என்னைத்தொடாதே

பெண்ணுளம்பு :
எனக்குக் கிட்ட வராதேங்கோ எட்டிநில்லுங்கோ!

**ஆண் நுளம்பு :**
ஏனப்பா அப்படிச் சொல்லுகிறாய்

பெண் நுளம்பு :
பின்னை என்ன வரவர உங்களுக்கு கண்கடை தெரியிதில்லை கொலரா தடுப்பூசி போடாத ஆளிலை ரத்தத்தைக் குடிச்சிட்டு வாறியள் உங்களுக்கும் கொலரா வந்தால்?

-டோ-

★ ★ ★

## காலை எழுந்தவுடன் படிப்பு பின்பு.....

காலையில் ஒரு மாணவன் பாடசாலைக்கு லேற்றாக வந்தான்: அப்போது ஆசிரியர் கேட்டார் டேய் குமார் ஏன் இவ்வளவு லேட்?

சார் காலை ஆறுமணியிலிருந்து பாண்கியூவில் நின்றேன்: இப்போது தான் பாண் இல்லை சொன்னார்கள் அதுதான் வரலேட்சார்

அதே மாணவன் மாலை (சாப்பாட்டு இடைவேளைக்குப் பின்) லேட்டாக வந்தான், டேய் குமார் ஏன் லேட் ஆசிரியர் மீண்டும் வினவினார் அரிசிக் கியூவில் நின்று இப்பதான் அரிசி எடுத்துக் கொடுத்துட்டு படிக்கும் புத்தகமென நினைத்து கூப்பன் புத்தகங்களை கொண்டு வந்துவிட்டேன் என்றான்.

K. S. கரன்
உரும்பிராய்

★ ★ ★

## உன்னையொன்று கேட்பேன் உண்மை சொல்ல வேண்டும்

**ஆசிரியர் :** ஏய் வசந்தி ஒரு றாத்தல் எத்தனை அவுன்ஸ்!

**வசந்தி :** 12 அவுன்ஸ் சார்

**ஆசிரியர் :** வடிவாக யோசித்துச் சொல்லு

**வசந்தி :** நான் பொய்யென்றால் ஒரு றாத்தல் பாணை நிறுத்துப்பாருங்கோ ஸார்.

K. S. கரன்
உரும்பிராய்.

★ ★ ★

## பெத்தமனம் பித்து பிள்ளை மனம்? ...........!

ஒருவர் : என் மகன் பட்ஜெட்டிற்குப் பின் பீடி குடிப்பதை நிறுத்தி விட்டான்.

மற்றவர் : திருந்தியிட்டான் போலிருக்கு நல்ல பையன்.

**1-ம் ஆள் :** அதில்லை இப்போ ஒரு சதம் விலை குறைந்தபின் சிகரெட் குடிக்கிறான்.

**2-ம் ஆள் :** ?..............

– எஸ். கே.

# உங்கள் கேள்விகளும் தவாத பதில்களும் — தீசன்

S. K. ராஸ், வண்ணையூர்

Q கண்ணகி கண்ணீர் விட்டபோது மதுரை எரிந்தது. நமது பெண்கள் கண்ணீர் விட்டால்?

குக்கர் கூட தீப்பற்றி எரியாது.

Q உலகத்தில் ஆண்களின் தொகையா, பெண்களின் தொகையா கூட?

நீர் கேட்ட இரு வகையினராலும் சனத் தொகைதான் கூட.

H. F. M. இக்பால், முஸ்லீம் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

Q குசேலர் குடும்பம் இன்றிருந்தால்...?

குசேலருக்கும் மனைவிக்கும், பாண் கியூவில் நிற்பதற்கு ஆட்கள் தேவைப்படாது.

செல்வி S. T. மலர்,
மிதிலைவாசா, பண்ணாகம்.

Q நம்நாடு ஏன் பல விஷயங்களில் இருக்கிறது?

யார் சொன்னது; நல்ல நடிப்பு, நல்ல கதை டைரக்ஷன், மொத்தத்தில் நல்ல முன்னேற்றம் அடைந்துள்ளது. M. G. R. இன் 'நம்நாடு'

M. நாகேந்திரம், மலிபன்வீதி, கொழும்பு-11

Q உணவு நெருக்கடியை சமாளிக்க அரசு மேற்கொண்டுள்ள முயற்சி சரியானதா?

எதைக் கேட்கிறீர்... கொலரா வென்று சொல்லி வடபகுதி பழவகை, மரக்கறி வகை முதலியவற்றைக் கொண்டு செல்லாமல் ஆனையிறவு உப்பை மாத்திரம் எடுத்துச் செல்ல சம்மதித்ததையா? (1ம் பரிசு)

செல்வ சிவகுரு நிர்மலா,
புன்னாலைக்கட்டுவன் வடக்கு

Q புத்திசாலி யாரைப் போன்றிருப்பான்?

நிச்சயமாக "கலகலப்பு தீசன்" போன்றிருக்க மாட்டான்? (2ம் பரிசு)

R. வசந்தி, கொழும்புத்துறை.

Q உங்களுக்கு திருமணமாகிவிட்டதா?

ஏன் உங்களுக்கு இன்னும் திருமாணமாகவில்லையா?

S. A. பிரகாஸ், கொழும்பு-11
79, 2ம் குறுக்குத்தெரு

Q நான் அறிவாளியாக ஒரு அறிவுரை சொல்வீரா?

'காகம் திட்டி மாடு சாவதில்லை' நான் சொல்லி நீர் அறிவாளியாகப் போவதுமில்லை.

A. கனேஸ், 79, 2ம் குறுக்குத்தெரு,
கொழும்பு.

Q தாங்கள் நிதி மந்திரியானால்...

கலகலப்பின் விலையை நள்ளிரவுக்கு நள்ளிரவாக உயர்த்த மாட்டேன்.


## சற்றுப் பொறுப்பாய் பத்தினியே!

மனைவி:

இஞ்சருங்கோ மழையும் வந்திட்டுது உழவேணும் எங்கடை ராக்ரரும் பழுதாப் போச்சு, ஆற்றையன் ராக்ரரைப் பிடிச்சுக் கொண்டு வாருங்கோ.

கணவன்:

அதுக்கேனப்பா துள்ளிப் பாயிரு, பிழைப்பட்டால், உடனடியாக குணம் மோட்டர் வேக்சுக்குக் கொண்டு போனால் திருத்தித் தருவார்கள்.

ராக்ரர், மற்றும் மோட்டார் வாகனங்கள்
திருத்துவதற்கு
↓
**குணம் மோட்டர் வேக்ஸ்**
கண்டி ரோட்,
**வவுனியா.**

உரிமையாளர்:
**K. சற்குணராஜா**

R. தேவசந்திரிகா, சங்கானை

Q உங்களை யாராவது காதலித்தால்...

,, ,, ,,

செலவன் A.S ஆனந், கணேஷபவன், பண்ணாகம்

Q இளம் வயதினர் சினிமா பார்ப்பதனால் கெட்டுப் போகிறார்கள், கூறுகிறார்கள் இதைப் பற்றி உங்கள் கருத்தென்ன?

கல்வித் திணைக்கள வெளியீடு 3ம் வகுப்பு தமிழ் மலரில் படம் பார், பாடம் படி என்று இருக்கிறது. அதன்படி பார்த்தால் படம் பார்த்த பின் தான் படிக்கச் சொல்கிறார்கள். இனி நீர் 'ஆனந்'தமாக படம் பார்க்கலாம். (3வது பரிசு)

S. யோகேஸ்வரன், அராலி

Q கண்டதின்படியெல்லாம் எழுதுகிறீரே உமக்கு தண்டனை கிடைத்தால்?

நிச்சயமாக தூக்குத் தண்டனை கிடையாது

உள்ளூரில் விளைபொருட்கள்
நல்விலையில் விற்க
நாடிடுவீர் தேடிடுவீர்
நம் பணியைத்தானே

பியூப்பிள்ஸ் ரேட் சப்ளைஸ்

People Trade & Supplies

143, மலிபன் வீதி, கொழும்பு-11

தொலைபேசி: 25389

K. ரவிகுமார், யாழ் மத்திய கல்லூரி

Q உண்மையான காதல் எங்கே பிறக்கிறது?

நிச்சயமாக பிரசவ விடுதியில் அல்ல.

M. கௌசிகன், துன்னாலை

Q மனிதர்கள் பணத்துக்கு ஆசைப்படுகிறார்களா? குணத்துக்கு ஆசைப்படுகிறார்களா?

இப்படியொரு கேள்விகேட்டு அது சிறந்ததானால் 5/- பரிசுகிடைக்குமென நினைத்தீர் இல்லையோ மொத்தத்தில் எல்லாமே பணத்துக்கு தாண்டா. குணம்??

S. K. யோகன், வண்ணார்பண்ணை

Q உமது புகைப்படத்தை கலகலப்பில் பிரசுரிப்பீரா?

பம்பலப்பிட்டி போலீசாருக்கு எனது பெயரைக் குறித்து 11-6-1971ல் எடுத்த எனது புகைப்பட இலக்கத்தை எடுத்து எனக்கு அனுப்பிவையும் தேவையாயின் உமக்கு ஒரு பிரதி அனுப்பிவைக்கலாம்.

Q அக்கால தமிழன் கல்லிலே கலைவண்ணம் கண்டான். இக்கால தமிழன்...

கள்ளிலே காண்கிறான் என நினைக்கிறீரா?

S. ரவி, ஊரெழு

Q 'கலகலப்பு' விலை அதிகம் பக்கங்கள் குறைவு 'ஏன்?

பாணின் விலை அதிகம் நிறை குறைவு ஏன்? என்று ஒரு கேள்வி கேட்டிருந்தால் 4 கலகலப்பு வாங்கும் காசை பரிசாகப் பெற்றிருக்கலாமே.

M. குணம், அளவெட்டி

Q நீங்கள் தியாகராஜா எம்; பி.யை நேரில் சந்தித்தால்...

அவரது துப்பாக்கி சூட்டுசம்பவ வரவு செலவு 24-95 சதத்தையும் தருவார் என எதிர்பார்க்கிறீரா?

1ம், 2ம். 3ம் பரிசு பெற்றவர்களுக்கு இம்முறை

**சாந்தி தோட்டத்தினர் சார்பில்**

முறையே 5/- 3/- 2/-

அனுப்பிவைக்கப்படும்.

அடுத்த இதழில் பரிசுப் பணம் 10/- 5/- 3/- 2/- வழங்க:

**இணுவில் செல்வம் மெக்கானிக் நிலையத்தார்**

முன்வந்துள்ளனர்.

கேள்விகள் அனுப்பும் முகவரி:

கேள்வி பதில்
கலகலப்பு
இணுவில்

---

## பாப்பா பாப்பா காக்கா நரியின் கதைகேளு

(மாவு தட்டுப்பாடான காலத்தில்) கிழவியொருத்தி பல வகை மாக்களையும் கலந்து வடை சுட்டுக் கொண்டிருந்தாள். இதனைக் கண்ட காகம் அக்கிழவியை 'லபக்' கென்று தூக்கிக் கொண்டு போய் ஒரு மரத்தின் மேல் வைத்திருந்தது. இதனை மரக்கிளையில் இருந்து கவனித்த குள்ள நரி (நரி எப்படி மரத்தில் ஏறியதென்பது கற்பனை) கிளவியிலிருந்த கொலராக் கிருமிகள் தனக்குப் பிடித்தாலும் என்ற பயத்தில் கீழே குதித்து ஓடிவிட்டது. பின்னக் காகமும் கிழவியும் சந்தோஷமாக சிலகாலம் வாழ்ந்தார்கள்?

—வீணன்—

## வட்டு எம். பியும் சுட்ட...

ஒரு வாங்கில் இருந்தார். இருவரும் விசாரிக்கப்பட்டோம். எமது நண்பர்களுக்கே அன்பளிப்பாக புத்தகம் கொடுக்காத நான் பொலீசாருக்கு 5 கலகலப்பு பிரதிகளைக் கொடுத்தேன். (பாடசாலையில் படிக்கும்போது ஆசிரியர்கள் கேட்கும் கேள்விகளுக்கே எவ்வளவோ சிரமப்பட்டு பதில் கூறிய நான், அன்று எப்படித்தான் டக் டக்கென்று பதில் சொன்னேனோ எனக்கே தெரியாது.)

### கலகலப்பு ஆசிரியர் கைது !

இதற்கிடையில் எம்மை பொலீஸ் நிலையத்திற் கண்ட சிலர், எம்மை கைதுசெய்து விட்டதாக ஒரு வதந்தியைப் பரப்பி விட்டனர். செய்தி எங்கும் பரந்தது. வீதியால் செல்ல முடியவில்லை. கேள்வி கேட்பவர்களுக்கு பதில் சொல்லியே அலுத்துவிட்டது. 'கலகலப்பு' வாசகர்கள் பலர் நேரில் வந்து விசாரிக்கத் தொடங்கி விட்டாாகள்.

வழமைபோல் என்னைக் கண்டு சிரிப்பவர்கள் எல்லோரையும் கண்டு சிரிக்கிறேன்: ஆனால் அது கலகலப்பான சிரிப்பு அல்ல !

### 'சூட்டிங் தீசன்'

இதன் பின்னர், யாழ்ப்பாணம், சுன்னாகம் ஆகிய இரு இடங்களிலும் பொலிசார், இரகசிய பொலிசார், என்னையும் உதவியாசிரியரையும் விசாரணை செய்தனர். இதற்கிடையில், சிலர் என்னைக் கேலி செய்யவும் தப்பவில்லை. ஒருநாள் மாலை வேம்படி வீதியால் சென்று கொண்டிருந்த போது ஒரு மாணவி ''சூட்டிங் தீசன் வருகிறார் !'' என்று சொல்லிவிட்டு மறைந்து விட்டார். எனக்கு அழுவதா, சிரிப்பதா என்று தெரியவில்லை. இது போலவே இன்னும் பல சம்பவங்கள்.

என்னுடைய புதிய சஞ்சிகைக்கு திடீரென்று இப்படி ஒரு பெரிய விளம்பரத்தை இலவசமாக செய்து விட்ட அந்த 'சூட்டிங்' பிரமுகருக்கு நன்றி தெரிவிப்பதற்காகத் தேடினேன். என்னால் முடியவில்லை. பொலீசார் தேடிக்கொண்டிருக்கிறார்கள் !

(தொடரும்)

உள்ளூரில் விளைபொருட்களை அதிகப்படுத்துங்கள்.
உங்கள் தேவையே எங்கள் சேவை
வாங்கவும் விற்கவும்
**செல்வம் ரேடேர்ஸ்**
மலிபன் வீதி, **கொழும்பு — 11**

## மலைப்புச் சொற்றொடர் —தீசன்—

- எம். பி.யின் மனம் துக்கமறியாது
- பாணின் விலையேறுகிறதென எம். பி. அழுதாராம்
- லெக்சனில் நிற்பவர் புத்தி மத்திமம்
- போஸ்டரும் நோட்டீசும் லெக்சனுக்குறுதி
- கட்சியறியாமல் கன்வஸிங் செய்யாதே
- குடிகாரன் வோட்டு (Vote) கிழிந்த வேட்டு
- லெக்சன் முடியுமட்டும் அன்பர், நண்பர் அப்புறம்
  நீ யார், நானான் (வோட்டுப்போட்டவர் என்ன ஆனார்)
- கூட்டம் போட்டால் கல்லுக் குவியும்
- கிணற்றில் விழுபவருக்கு எம். பி. பதவியேன் ?
- கரெக்டர் கொடுக்கவும் கைக்கூலியா
- லஞ்சம் பெற்றவர் லட்சணமென்ன
- சனமுள்ளபோதே கூட்டம் போடு
- பணமிழந்த அபேட்சகருக்கு J. P. பதவியேன்
- சாராயம் கடத்த சவப்பெட்டி தேவை
- எம் பிக்குமொருகாலம் வாக்காளனுக்குமொருகாலம்
- ஆறு முறைகள் அவலப்பட்டவர் 7ம் முறையில் எம். பியே
- ஆதரவாளன் பேச்சு எம் பிக்கு கேளாது
- கைக்காசு பெறும் எம். பிக்கு கட்சியொரு கேடா ?
- எம். பியின் சேவை லெக்சனில் தெரியும்

வீட்டுக்கு வீடு விழுந்தடித்து வோட்கேட்டு
வென்றவனே எம். பி. யென்றறி
கைகூப்பிச் சென்றானும் உன்வோட்டைப் போடாதே
கைகாட்டிச் சென்றிடுவார் பின்னர்

### கலகலப்பு வாக்கு

அதிகாலையில் ''சூரிய குமாரன்'' உதிக்குமுன் எழுந்து
நல்ல ''மாட்டின்'' சாணத்தால் வீட்டை மெழுகி
''அருள்தரும் அம்பலத்தானையும்'' அத்துடன் சுப்பிரமணிய
னையும் ''பொன்னம்பலத்தானையும்'' வணங்கி
''காவடி'' யெடுக்கும் ''பக்தரை'' காண்பதே ''மகிழ்ச்சி''

—வீணன்

அவளின் முகப்பொலிவு கண்டேன்
நான் மெய்மறந்து தனியாக நின்றேன்.
இதற்குக் காரணம் என்ன தெரியுமா?
**சித்திரகலாவில்** பிடிக்கப்பட்ட புகைப்படங்களே
சினிமா சிலேட், டிசைன் புளக் தயாரிப்பாளர்கள்

**சித்திரகலா பிடிப்பாளர்கள்**

கே. கே. எஸ். வீதி, **சுன்னாகம்**

சிறந்த, கால்நடைத் தீனிகளுக்கும்
கலப்படமற்ற சுத்தமான
**தேங்காயெண்ணெக்கும்**
நாடுங்கள்
**S. அருணாசலம் செட்டியார் அன் சன்ஸ்**
தொலைபேசி : 21792
165, 5ம் குறுக்குத் தெரு,
கொழும்பு-11

**வாசனைமிக்க, அத்தர் பன்னீர்**
கோயில் அபிஷேக திரவியங்களுக்கு
நாடுங்கள்
**ராஜா மெடிகல் ஸ்ரோர்ஸ்**
(பஸ் நிலைய முன்பாக)
சுன்னாகம்.

**மனைவி :** இஞ்சருங்கோ, இஞ்சருங்கோ இஞ்சை ஓடியாருங்கோ உங்கடை புத்திர பாக்கியம் என்ன செய்யிதென்டு வந்து பாருங்கோ,
**கணவன் :** என்னப்பா கத்திக்கொண்ருடிக்கிறு சுருட்டுத்தானே குடிக்கிறுன் அதுவும் "ஜனதா சுருட்டு" நல்லதைத்தான் தெரிவு செய்திருக்கிறுன்.
உங்கள் தெரிவும் நல்லதாக இருக்கவேண்டும்.

**ஜனதா சுருட்டுக்கள்**

உரிமையாளர் :
ச. கோபாலபிள்ளை

தயாரிப்பாளர்கள் : மேகலா ஸ்ரோர்,
119/1, ஆட்டுப்பட்டித் தெரு,
கொழும்பு - 13

**படித்த மகன் :** என்னப்பா கவலையோடு இருக்கிறியள்?

**படியாத தந்தை :** ஒன்றுமில்லை. உனக்கெண்டு ஒரு நல்ல மணிக்கூடு வாங்கிக்கொண்டு வந்தேன் வீட்டை கொண்டுவாறதுக்கிடையிலை அது பழுதாப்போச்சு.

**ப. மகன் :** பரவாயில்லை எந்த மணிக்கூடாக இருந்தாலும் நல்ல முறையில் திருத்தலாம்.

**பியசேன அன் சன்**

**PIYASENA & SON**

ரேப்றெக்கோட்டர், மணிக்கூடு,
ரேடியோ
நம்பர் அடிக்கும் மிஷின்
முதலியன
திருத்துபவர்கள்

**கண்டி வீதி** **கிளிநொச்சி**

தலைமைத் தபால் கந்தோரில் பதிவு செய்யப்பட்டது.

# கலகலப்பு

நகைச்சுவை

மாத இதழ்

—

ஆசிரியர்:

எஸ். கே.

தீசன்



படம் (2) பஸ்தரிப்பு நிலையமா ? பஸ்தறிப்பு நிலையமா ?

படம் 1, 3 பாண் படுத்தும் பாடு

'படப்பிடிப்பு மில்ஸ்'


மனைவி : என்னை நீங்கள் அதிக சீதனம் வாங்காமல் திருமணம் செய்தது என் அழகில் தானே ?

கணவன் : அப்படி யொன்றுமில்லை. முதன் முதலில் உன் புகைப் படத்தை (போட்டோ) பார்த்ததும் நான் மயங்கிவிட்டேன். உன்னைவிட உன் போட்டோ பிரமாதம்.

மனைவி : அதற்காகத்தான் நான் முன்னரே எனது புகைப் படத்தை ஸ்ருடியோ பிறின்ஸெஸில் எடுத்திருந்தேன்.

## ஸ்ருடியோ பிறின்ஸெஸ்

சுன்னுகம்.

(படப்பிடிப்பில் 25 வருடங்சளுக்கு மேலான சேவை)

காதலி : அத்தான் கம்மென்று ஏதோ வாசனையடிக்கிறதே நீங்கள் என்ன அழகு சாதனப் பொருட்களைப் பாவிக்கிறீர்கள் ?

காதலன் : அப்படி யொன்றும் விஷேசமாகவில்லை. நவீன முறையில் வெளிவரும் ''ஹம்சர் சுருட்டுக்களையே'' பாவிக்கிறேன். அதுதான்

பில்டர் இணைக்கப்பட்டு பல சைஸ்களில் வெளிவருகிறது

**ஹம்சர் சுருட்டுகள்**

தயாரிப்பாளர் :

## நியூ ஹம்சர் & Co.

தாவடி, யாழ்ப்பாணம்,

உங்கள் மோட்டார்களை திருத்துவதற்கும்
பெயின்ரிங் வேலைகளைச் செய்வதற்கும்
எலக்றிக்கல் வெல்டிங் வேலைகளுக்கும்
தேடுங்கள் ! அதனை நாடுங்கள் !

## தர்மு கருஜ்

## THARMU GARAGE

உரிமையாளர் :
S. தர்மராஜா

கே. கே. எஸ் வீதி,
(மத்திய சந்தைக் கட்டிடம்)
இணுவில்



இப்பத்திரிகை இணுவில் கிழக்கு 68, சுந்தரபவனத்தில் வசிக்கும் இதன் ஆசிரியரும் உரிமையாளருமான சி. கேதீஸ்வரன் (தீசன்) என்பவரால் யாழ். கூட்டுறவு அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.